**பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைத்து சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட தற்செயல் அவசரகால பதிலளிப்புக் கூறின் (CERCs-2) - 2022**

---

பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைத்து சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட தற்செயல் அவசரகால பதிலளிப்புக் கூறின் (CERCs-2) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் உலக வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 நவம்பர் 03 ஆம் திகதிய 9290-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதி அமைச்சு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர்களாக உள்ளதுடன் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு என்பன அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கும் அதே வேளையில், நாட்டின் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மீது தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பாதகமான தாக்கத்தை குறைப்பதற்கு குறுகிய மற்றும் நடுத்தர கால தலையீட்டை வழங்குவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 108,062 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 325 மில்லியன் தொகையானதுடன் உலக வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2022 மே 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 நவம்பர் 09 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிச் செயலாற்றல்**

**நிதிகளின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத்தில் இருந்து பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை செலுத்திய பின்னர், மேலதிக மதிப்பீட்டின் காரணமாக ரூபா 1,096 மில்லியன் மற்றும் ரூபா 93 மில்லியன் மிகுதி தொகைகள் முறையே 4 மாதங்கள் மற்றும் 8 மாதங்கள் தாமதத்துடன் 2022 திசெம்பர் 29 மற்றும் 2023 ஏப்ரல் 18 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டன. | தங்களது அவதானிப்புடன் இணங்குகிறேன். | சரியான தரவைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிதிகள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 108,225 மில்லியனாக இருந்தது, இது ஐ.அ.டொலர் 325 மில்லியனிற்கு சமமாக இருந்தது, மேலும் இது 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் நிதிகளின் மொத்த பயன்பாடு ரூபா 99,903 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 274.37 மில்லியனாக இருந்தது, இது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 84 சதவீதம் ஆகும். | இணங்கப்பட்டது. | குறித்துரைக்கப்பட்டவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், ஒதுக்கப்பட்ட நிதிகளை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் இது தேவைப்படுகிறது. |
| (இ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் உள்ள அரசாங்க கடன் முகாமைத்துவ தகவல் முறைமையின் பிரகாரம் ரூபா 2.26 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 6,934.5 கடன் வழங்கும் முகவரிற்கு வழங்கப்படாத கடன் தொகையின் மீதான கடப்பாட்டுக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.<br><br>ரூபா 2.26 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் கடன் வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டுள்ளது. | பரந்த இணைப்பு அபவிருத்தி செயற்திட்டத்தின் (ICDP) கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், நாட்டின் அவசரகால சூழ்நிலை காரணமாக, இந்த திணைக்களத்தால் அமுலபடுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைத்து சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கும் | ஒதுக்கப்பட்ட மொத்த நிதியையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நோக்கத்துடனான பரந்த இணைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் (ICDP) - CERCs ஐ செயற்படுத்துவதன் மூலம் ஐ.அ.டொலர் 325 மில்லியன் மீண்டும் ஒதுக்கப்பட்டது. அதன் பிரகாரம் கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஐ.அ.டொலர் 679,985.04 தொகையான கடப்பாட்டு கட்டணங்கள் முழு ICDP செயற்திட்டத்திற்கும் (போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டம் உட்பட) செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3. பௌதீக செயலாற்றல்

| கூறு/ செயற்பாடு/ உப செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பு உரங்கள் | 2022/23 பெரும்போகத்தில் 1,000,000 உழவர் பயனாளிகளுக்கு 150,000 மெட்ரிக் தொன் அளவிலான யூரியா உரம் கொள்வனவு செய்யப்பட்டு கமநல சேவை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்படுதல். | 2022 திசெம்பர் இறுதிக்குள் 107,713 மெட்ரிக் தொன் யூரியா கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் 150,000 தொன் யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கு இச் செயற்திட்டம் எதிர்பார்த்திருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் மொத்தமாக 107,713 தொன்கள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் உரம் விநியோகிக்கப்பட்டுள்ள பலனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023.03.08 இல் விவசாய அமைச்சின் செயலாளர் தலைமையில் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் உலக வங்கி அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பெரும்போகம் 2022/23 இற்கான உர விநியோகத்திலிருந்து பயனடைந்த விவசாயிகளின் பயன்பாடு தொடர்பான தகவல்களைக் கோரி 2023.03.10 இல் விவசாய அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. | இலக்குகளை குறித்துரைக்கப்பட்டவாறு அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பது அவசியமானதுடன் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |